ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 5.1 – கையார்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 5.1 – கையார்

‡ கை ஆர் சக்கரத்து ⋆
என் கருமாணிக்கமே ! என்றென்று ⋆
பொய்யே கைம்மை சொல்லிப் ⋆
புறமே புறமே ஆடி ⋆
மெய்யே பெற்றொழிந்தேன் ⋆
விதி வாய்க்கின்று காப்பார் ஆர் ⋆
ஐயோ கண்ண பிரான் ! ⋆
அறையோ இனிப் போனாலே ॥ **5.1.1** ॥

போனாய் மா மருதின் நடுவே ⋆
என் பொல்லா மணியே ⋆
தேனே ! இன்னமுதே ! ⋆
என்றென்றே சில கூற்றுச் சொல்ல ⋆
தானேல் எம் பெருமான் ⋆
அவன் என்னாகி ஒழிந்தான் ⋆
வானே மா நிலமே ⋆
மற்று முற்றும் என் உள்ளனவே ॥ **5.1.2** ॥

உள்ளன மற்றுளவாப் ⋆
புறமே சில மாயம் சொல்லி ⋆
வள்ளல் மணிவண்ணனே ! ⋆
என்றென்றே உன்னையும் வஞ்சிக்கும் ⋆
கள்ள மனம் தவிர்ந்தே ⋆

உன்னைக் கண்டு கொண்டுய்ந்தொழிந்தேன் ⋆
வெள்ளத்தணைக் கிடந்தாய் ⋆
இனி உன்னை விட்டென் கொள்வனே ॥ **5.1.3** ॥

என் கொள்வன் உன்னை விட்டென்னும் ⋆
வாசகங்கள் சொல்லியும் ⋆
வன் கள்வனேன் மனத்தை வலித்துக் ⋆
கண்ண நீர் கரந்து ⋆
நின் கண் நெருங்க வைத்தே ⋆
எனதாவியை நீக்க கில்லேன் ⋆
என் கண் மலினம் அறுத்து ⋆
என்னைக் கூவி அருளாய் கண்ணனே ॥ **5.1.4** ॥

கண்ண பிரானை ⋆
விண்ணோர் கரு மாணிக்கத்தை அமுதை ⋆
நண்ணியும் நண்ண கில்லேன் ⋆
நடுவே ஓர் உடம்பில் இட்டு ⋆
திண்ணம் அழுந்தக் கட்டிப் ⋆
பல செய்வினை வன் கயிற்றால் ⋆
புண்ணை மறைய வரிந்து ⋆
என்னைப் போர வைத்தாய் புறமே ॥ **5.1.5** ॥

புறம் அறக் கட்டிக் கொண்டு ⋆
இரு வல் வினையார் குமைக்கும் ⋆
முறை முறை ஆக்கை புகல் ஒழியக் ⋆
கண்டு கொண்டொழிந்தேன் ⋆
நிறம் உடை நால் தடம் தோள் ⋆
செய்ய வாய் செய்ய தாமரைக் கண் ⋆

அறமுயல் ஆழி அங்கைக் ⋆
கருமேனி அம்மான் தன்னையே ‖ **5.1.6** ‖

அம்மான் ஆழிப் பிரான் ⋆
அவன் எவ்விடத்தான் யான் ஆர் ⋆
எம்மா பாவியர்க்கும் ⋆
விதி வாய்க்கின்று வாய்க்கும் கண்டீர் ⋆
கைம்மா துன்பொழித்தாய் ! என்று ⋆
கை தலை பூசல் இட்டே ⋆
மெய்ம் மாலாய் ஒழிந்தேன் ⋆
எம்பிரானும் என் மேலானே ‖ **5.1.7** ‖

மேலாத் தேவர்களும் ⋆
நிலத் தேவரும் மேவித் தொழும் ⋆
மாலார் வந்தின நாள் ⋆
அடியேன் மனத்தே மன்னினார் ⋆
சேலேய் கண்ணியரும் ⋆
பெரும் செல்வமும் நன் மக்களும் ⋆
மேலாத் தாய் தந்தையும் ⋆
அவரே இனி ஆவாரே ‖ **5.1.8** ‖

ஆவார் ஆர் துணை என்று ⋆
அலை நீர்க் கடலுள் அழுந்தும் நாவாய் போல் ⋆
பிறவிக் கடலுள் ⋆
நின்று நான் துளங்க ⋆
தேவார் கோலத்தொடும் ⋆
திருச் சக்கரம் சங்கினொடும் ⋆

ஆவா ! என்றருள் செய்து ⋆
அடியேனொடும் ஆனானே ॥ **5.1.9** ॥

ஆனான் ஆள் உடையான் என்று ⋆
அஃதே கொண்டுகந்து வந்து ⋆
தானே இன் அருள் செய்து ⋆
என்னை முற்றவும் தான் ஆனான் ⋆
மீன் ஆய் ஆமையும் ஆய் ⋆
நரசிங்கமும் ஆய்க் குறள் ஆய் ⋆
கான் ஆர் ஏனமும் ஆய்க் ⋆
கற்கியாம் இன்னம் கார் வண்ணனே ॥ **5.1.10** ॥

‡ கார் வண்ணன் கண்ண பிரான் ⋆
கமலத் தடம் கண்ணன் தன்னை ⋆
ஏர் வள ஒண் கழனிக் ⋆
குருகூர்ச் சடகோபன் சொன்ன ⋆
சீர் வண்ண ஒண் தமிழ்கள் ⋆
இவை ஆயிரத்துள் இப்பத்தும் ⋆
ஆர் வண்ணத்தால் உரைப்பார் ⋆
அடிக் கீழ் புகுவார் பொலிந்தே ॥ **5.1.11** ॥

அடிவரவு — கையார் போனாய் உள்ளன என்கொள்வன் கண்ணபிரானை புறமற அம்மான் மேலா ஆவாரார் ஆனான் கார்வண்ணன் பொலிக

கையார் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்